"மழைநீர் சேமிப்போம்" "பிளாஸ்டிக்கைதவிர்ப்போம் "

நகராட்சிஅலுவலகம்,
தேனி - அல்லிநகரம் ,
நாள் : 24.12.2021.

## நகர்மன்றஅவசரக்கூட்டஅழைப்பிதழ்

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2051 பிலவ வருடம், மார்கழி மாதம் 09 - ம் நாள் 24.12.2021-ம் தேதி வெள்ளிக் கிழமை மாலை 04.00 மணி அளவில் நகர்மன்றஅலுவலகத்தில் உள்ள கூட்ட மண்டபத்தில் நகர்மன்றஅவசரக்கூட்டம் நடைபெறும்.

தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர்
தேனி -அல்லிநகரம் நகராட்சி

## பொருள்01:-

சென்னை உயர்நீதி மன்ற மதுரைக் கிளையில் திரு.பா.நல்லதம்பி உதவியாளரால் தொடர்ந்துள்ள வழங்கு எண். டபிள்யூ ( எம் ) எண். 8022 / 2020 - ற்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ. 10000/- திரு.கே.ஹேமகார்த்திகேயன் வழக்கறிஞருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு :-**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1767 / 2020 / சி1**

**தீர்மான எண் :** 2102
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள்02:-

தேனி - அல்லிநகரம் நகராட்சி பாதாள சாக்கடை வீட்டு செப்டிக் டேங்க் சுத்தம் செய்வதற்கு திரு.எஸ். ஜெயக்குமார் என்பவர் தேனி - அல்லிநகரம் நகராட்சி கருவூலத்தில் 29.03.2021ல் தொகை ரூ 800.00 பணம் செலுத்தி 26.11.2021ம் தேதிய விண்ணப்பத்தில் வீட்டில் செப்டிக் டேங்கில் அடைப்பு ஏற்பட்டதனை சுத்தம் செய்ய வேண்டி கோரியுள்ளார். ஆனால் அன்னார் குடியிருக்கும் வடபுதுப்பட்டி

இந்நகராட்சியின் எல்கைக்கு வெளியே அமைந்துள்ளதால் பாதாள சாக்கடை திட்டஉபவிதிகளின்படி, இந்நகராட்சி எல்கைக்கு வெளியே செப்டிக் டேங்க் சுத்தம் செய்ய வாகனம் அனுப்ப வழிவகை இல்லை என்பதால் அன்னாரின் 13.12.2021ம் தேதிய கடிதத்தில் தான் செலுத்திய கட்டணத்தை திரும்ப வழங்க கோரியுள்ளார்.

எனவே மனுதாரர் கோரிக்கையை ஏற்று திரு. எஸ். ஜெயக்குமார் அவர்கள் பாதாள சாக்கடை வீட்டு செப்டிக் டேங்க் சுத்தம் செய்வதற்கு செலுத்திய தொகை ரூ 800/- ஐ திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதிவேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :-

அ) மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண். 3446 / 2021 / இ3**

**தீர்மான எண் :** 2103
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள்03:-</u>

தேனி - அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட இரண்டு நகர்புற சுகாதார நல மையதிற்கு கட்டிடம் கட்டுவதற்கு ரூ. 25.00 இலட்சம் வீதம் 2 மையங்களுக்கு ரூ. 50.00 இலட்சத்தினை 2021 – 2022 - ம் ஆண்டு 15 வது நிதிக் குழு சிறப்பு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்து, பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னைஅவர்களின் 17.12.2021 - ம் நாளிட்ட செயல்முறை ஆணை ந.க.எண். 32454 / 2021 / AMRUT – 2 - ன் படி நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது.

1) நகர்புறசுகாதாரநலமையம் = தேனி.
2 ) நகர்புறசுகாதாரநலமையம் = பொம்மையகவுண்டன் பட்டி.

அதன்படி, பணிகள் மேற்கொள்ள வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**

1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று அவசர அவசியம் கருதி மேல் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.3625 / 2021 / இ1**

**தீர்மான எண் :** 2104
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்04:-**

தேனி – அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான பொறியியல் பிரிவு வாகனம் TN.60 AF.0619 ற்கு தகுதிச் சான்று பெறும் பொருட்டு பழுது நீக்கும் பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே, மேற்கண்ட வாகனத்திற்கு பழுது நீக்கும் பணிகள் மேற்கொள்ள உத்தேசச் செலவினத் தொகை ரூ.8,100/- ற்கு பொதுநிதியில் மேற்கொள்ளவும், அதற்கு உள்ளூர் விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணிமணையின் பெயர் | விலைப்புள்ளி தொகை( ரூ ) | கூடுதல் / குறைவு |
|---|---|---|---|
| 1 | S.M.K.மோட்டார் ஒர்க்ஸ், தேனி | 8,100/. | குறைவு |
| 2 | C.M. ஆட்டோகேரேஜ்,தேனி | 9,400/. | கூடுதல் |
| 3 | ஸ்ரீ. நாகஜோதிமோட்டார் ஒர்க்ஸ், தேனி | 8,800/. | கூடுதல் |

**அலுவலககுறிப்பு:** அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கியுள்ள S.M.K. மோட்டார் ஒர்க்ஸ், தேனி நிறுவனத்தாரின் விலைப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

இ) செலவினத்தொகை ரூ.8,100/- குடிநீர் நிதியில்மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 3467 / 2021/இ2**

**தீர்மான எண் :** 2105
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்05:-**

தேனி – அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான பொறியியல் பிரிவு வாகனம் TN.60 AE.9759 ற்கு தகுதிச் சான்று பெறும் பொருட்டு பழுது நீக்கும் பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே, மேற்கண்ட வாகனத்திற்கு பழுது நீக்கும் பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவினத்தொகை ரூ.8,100/- ற்கு பொதுநிதியில் மேற்கொள்ளவும், அதற்கு உள்ளூர் விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணிமணையின் பெயர் | விலைப்புள்ளி தொகை( ரூ ) | கூடுதல்/ குறைவு |
|---|---|---|---|
| 1 | S.M.K.மோட்டார் ஒர்க்ஸ், தேனி | 8,100/. | குறைவு |
| 2 | C.M. ஆட்டோகேரேஜ்,தேனி | 9,400/. | கூடுதல் |
| 3 | ஸ்ரீ. நாகஜோதிமோட்டார் ஒர்க்ஸ், தேனி | 8,800/. | கூடுதல் |

**அலுவலககுறிப்பு:** அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கியுள்ள S.M.K. மோட்டார் ஒர்க்ஸ், தேனி நிறுவனத்தாரின் விலைப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

இ) செலவினத்தொகை ரூ.8,100/- குடிநீர் நிதியில்மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.3468/ 2021/இ2**

**தீர்மான எண் :** 2106
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள்06:-</u>

குடிநீர் நிதி 2021 - 2022 ம் ஆண்டு நிதியின் கீழ் தேனி –அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான பொறியியல் பிரிவு வாகனம் TN.60 AE.2008 ல் உள்ள மின்கலம் ( Battary ) பழுது அடைந்துள்ளது. இதனால் மேற்கண்ட வாகனத்தை இயக்க முடியாத சூழ்நிலையில் உள்ளது. எனவே, மேற்கண்ட வாகனத்திற்கு புதிதாக மின்கலம் ( Battary ) வாங்கி பொருத்தும் பணிக்கு உத்தேச செலவினத்தொகை ரூ.9,000/- ற்கு பொதுநிதியில் மேற்கொள்ளவும், அதற்குஉள்ளூர் விலைப்புள்ளி கோரியதில், வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள்மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர்பெயர் | விலைப்புள்ளிதொகை ரூ | கூடுதல் / குறைவு |
|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** |
| 1 | இம்பீரியல்பேட்டரிகார்னர், தேனி | 8939.00 | குறைவு |
| 2. | C.M.ஆட்டோமொபைல்ஸ், தேனி | 11200.00 | அதிகம் |
| 3. | பாலாஜிபேட்டரிசர்வீஸ், தேனி | 11350.00 | அதிகம் |

**அலுவலககுறிப்பு:** அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கியுள்ள இம்பீரியல் பேட்டரி கார்னர், தேனி நிறுவனத்தாரின் விலைப்புள்ளியை ஏற்று சப்ளை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

இ) செலவினத் தொகை ரூ8939/- குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 3468 / 2021/இ2**

**தீர்மான எண் :** 2107
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள்07:-</u>

தேனி - அல்லிநகரம் நகராட்சியில் 2021 - 2022 ம் ஆண்டின் 15 வது நிதிக் குழு திட்டத்தின் ( Tied Grant ) கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாவட்ட அளவிலான தமிழ் தினசரி நாளிதழில்களில் விளம்பரம் மேற்கொண்டதற்கு கீழ்கண்ட நிறுவனத்திடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| வ. எண். | நாளிதழ் மற்றும் பட்டியல் தொகை வழங்கப்பட்ட வேண்டிய நிறுவனத்தின் விபரம் | செய்தி மக்கள் தொடர்பு துறைஅனுமதி விபரம் | தொகை ( ரூ) |
|---|---|---|---|
| 1 | தினசங்கு நாளிதழ் ( Makkalin Urimai Kural Evening Daily ) | வெளியீட்டு ஆணை எண். 219 /2021 / செ.ம.தொ.அ / தேனி / நாள்.17.12.2021 | 15500.00 |

மேற்கண்ட தொகை ரூ.15500/-ஐ இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>:-

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளமன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்: 163 /2018/ இ1

**தீர்மான எண் :** 2108
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்08:-**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 12, கக்கன்ஜி காலனி மற்றும் வார்டு 26, டி.பி மேற்கு தெருவில் உள்ள சமுதாயக் கழிப்பிடத்தில் பழுதுபார்க்கும் பணிகள் மேற்கொள்ளுவதற்கு17.12.2021-ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதன்படிமேற்காணும் பணிக்கு நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொண்டவர்கள் கோரிய ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கோரியதொகை (ரூ) (வரிகள்நீங்கலாக ) | மதிப்பீட்டைவிடகூடுதல் / குறைவுசதவீதம் |
|---|---|---|---|
| 1 | திருமதி.த.தவமணி, நகராட்சி ஒப்பந்ததாரர், தேனி | 652455.97 | 0.54 % குறைவு |
| 2 | திரு.எஸ்.மாணிக்கம், நகராட்சி ஒப்பந்ததாரர், தேனி | 659328.88 | 0.50 % அதிகம் |

அலுவலகக்குறிப்பு

அ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவாக விலைவிகிதம் கோரிய **திருமதி.த.தவமணி** என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கமன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் : 3460 / 2021 / இ1**

**தீர்மான எண் :** 2109
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்09:-**

மனுதாரர் திரு.G.பாஸ்கரன், திரு V. சேதுவீராச்சாமி 5 / 1, சுந்தராஜ் தெருஇ அல்லிநகரம் தேனி என்பவர் தேனி அல்லிநகரம் நகராட்சி எல்லை அல்லிநகரம் கிராமம் இணக்கமளிக்கப்பட்ட விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.10 நகரளவை வார்டு – B, பிளாக்–3. நகரளவை எண். 21 / 3 (பகுதி) (பழைய சர்வே எண்.823/3பகுதி) 5381.18 சமீ (1.33 ஏக்கர் ) இடத்தை மனைகளாக பிரிக்க

விண்ணப்பம் செய்து உதவி இயக்குநர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், தேனி மாவட்டம் அவர்களின் ந.க.எண்.990/2021/தே.மா. நாள்.09.11.2021 ன் படி உள்ளாட்சி உபயோகத்திற்கு 20.23 ச.மீ இடம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழக உபயோகத்திற்கு (TANGEDCO) 21.35 ச.மீ இடம் சாலைகள் 3 எண்ணங்கள்

1. அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் (I)–(I) என எண்ணிடப்பட்ட கிழமேல் வடபக்கம் 10.0 மீட்டர், 10.0 மீ தென்பக்கம் தென்வடல் மேல்பக்கம் 151.10 மீ கீழ்பக்கம் 150.20 மீட்டருக்கு 1506.50 ச.மீ பரப்பளவு கொண்ட தென்வடல்
2. அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் (2)–(2) என எண்ணிடப்பட்ட கிழமேல் வடபக்கம் 15.00 மீட்டர், தென்பக்கம் 15.00 மீட்டர் , தென்வடல் மேல்பக்கம் 9.00 மீட்டர், கீழ்பக்கம் 9.00 மீட்டர் 135.00 ச.மீட்டர் பரப்பளவு கொண்ட கிழமேல் சாலை.
3. அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் (3)–(3) என எண்ணிடப்பட்ட கிழமேல் வடபக்கம் 12.20 மீட்டர் தென்பக்கம் 11.85 மீட்டர் தென்வடல் மேல்பக்கம் 9.00 மீட்டர் கீழ்பக்கம் 9.00 மீட்டர் 108.23 ச.மீட்டர் பரப்பளவு கொண்ட கிழமேல் சாலை

மனுதாரரால் தானபத்திர ஆவண எண்.7972 / 2021 நாள். 24.08.2021 பிழை திருத்தப் பத்திரம் 10313 / 2021 ல் நாள். 25.10.2021 ஒப்படைப்பு செய்தமைக்கு பின்னேற்பு வழங்கியும் மேலும் மேற்படி தானபத்திரம் மூலம் மனுதாரர் இடம் ஒப்படைப்பு செய்ததின் அடிப்படையில் உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு துறை அவர்களின் ந.க.எண். 990 / 2021 / தே.மா.2 நாள் . 09.11.2021 ) ம.வ/ந.ஊ.உ.இ. ( தே.மா) எண்.74/2021) உத்தரவுபடி தேனி அல்லிநகரம் கிராமம் வார்டு –B, பிளாக்–3, நகரளவை எண்.21/3 (பழைய புல எண்.823 / 3 பகுதியில் அமைந்துள்ள 1.33 ஏக்கர் பரப்பளவு கொண்ட மனைபிரிவில் 1 முதுல் 20 எண்ணங்கள் கொண்ட குடியிருப்பு மனைகள், உள்ளாட்சி உபயோகம் 20.23 ச.மீ இடம் மற்றும் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் மின்பகிர்மான கழக உபயோகத்திற்கு (TANGEDCO) 21.35 ச.மீ இடம் என ஒதுக்கீடு செய்து உத்திரவிடப்பட்டுள்ளது. மேலும் மேற்படி மனைபிரிவில் அமைந்துள்ள சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகளை மனைப்பிரிவு நிபந்தனைப்படி நகராட்சி பெயரில் மனை உட்பிரிவு செய்து பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மேலும் மனைபிரிவில் உள்ள சாலைகள் மற்றும் மழைநீர் வடிகால்கள் உரிய விதிகளின் படி நல்ல முறையில் அமைக்கப்பட்டுள்ளது. நகராட்சி பொறியாளர் அவர்களால் நாள்.06.12.2021ல் அறிக்கை அளித்துள்ளார். மேலும் நகராட்சி பொறியாளர் அவர்களின்

குறிப்பின்படி மேற்படி மனைப்பிரிவில் மின்கம்பங்கள் **8** எண்ணங்கள் அமைக்க மனுதாரரால் ரூ.**160000/–** **(** செ.எண்.**125**/TC**1/2/21–22/0009666** நாள்.**16.12.2021** **)** நகராட்சி கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. எனவே நகர் ஊரமைப்பு துறையால் நாள்.**09.11.2021**ல் வழங்கப்பட்ட தொழில்நுட்ப மனைப்பிரிவு ஒப்புதலுக்கு நகராட்சி மூலம் மனைப்பிரிவு அனுமதி வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மனுதாரர் ஒப்படைக்கப்பட்ட சாலைகள், மழைநீர் வடிகால்கள், மின்கம்பங்கள் போன்றவற்றினை நகராட்சி பராமரிப்பு செய்ய அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1710/2021/எப்–1**

**தீர்மான எண் :** 2110
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

தனிஅலுவலர் (மற்றும்)
ஆணையாளர்
தேனி-அல்லிநகரம் நகராட்சி